தோழி அகிலா எழுதும் கடிதம். இங்கு யாவரும் நலம். உங்கள் அனைவரின் நலம் அறிய ஆவல். இந்த வருடம் ______ திருவிழாவுக்கு நீயும் உன் குடும்பத்தினரும் இங்கு வர வேண்டும் என்பது எங்கள் அனைவரின் ______

என் தாத்தாவுக்கு எப்போதும் உன் ______ சங்கரியின் ஞாபகம்தான். சங்கரிக்காக சில ______ பொருள்களை வாங்கி வைத்திருக்கிறார். ______ முன்பைவிட இப்போது உடல்நலம் தேறிவருகிறது. பாட்டி அடிக்கடி உங்கள் ______ பற்றித் தான் பேசிக் கொண்டிருப்பார்.

நான் ஏற்கெனவே கலந்து கொண்ட ______ போட்டி பற்றி உன்னிடம் சொல்லி இருந்தேனே ! அந்த ஓவியப் போட்டியில் நான் ______ பரிசு வாங்கி இருக்கிறேன். இன்னொரு விஷயம் மறந்துவிட்டேன். இங்கே பக்கத்து வீட்டில் இருக்கும் நம் தோழிகளான சுகந்தியும் பரிமளாவும் உன் ______ ஆவலோடு எதிர் பார்த்திருக்கிறார்கள்.

அம்மா மிளகாய்ப்பொடியை ______ வைத்திருக்கிறார். கூடவே ______, எலுமிச்சை ஊறுகாய்களையும் போட்டு வைத்திருக்கிறார் ______. வத்தல், வடகம் என எதையும் கடையில் வாங்க வேண்டாம் என அம்மா சொல்லியிருக்கிறார். நீங்கள் வீடு திரும்பும் போது நம் ______ இவற்றை எடுத்துச் செல்லலாம் என்று சொல்லச் சொன்னார்.

அனைவருமே உங்கள் குடும்பத்தாரின் வருகையை ______ வழி மேல் விழி வைத்துப் பார்த்துக் காத்திருக்கிறோம். ______ நேரில் சந்திப்போம்.

இப்படிக்கு,
அகிலா

அவா	அரைத்து	விளையாட்டுப்	தங்கை	வருகையை
ஊறுகாய்	பொங்கல்	குடும்பத்தைப்	ஆவலோடு	மாங்காய்
ஓவியப்	வீட்டிலிருந்தே	விரைவில்	இரண்டாம்	பாட்டிக்கு

LIVEWORKSHEETS